தினமணி

## நெல் ஈரப்பதம் 20 சதமாக அதிகரிப்பு: நாகை ஆட்சியர்

First Published : 31 Oct 2011 02:15:53 PM IST

நாகப்பட்டினம், அக். 30: நாகை மாவட்ட நெல் கொள்முதல் நிலையங்களில், 20 சதம் ஈரப்பதமுடைய நெல்லும் கொள்முதலுக்கு அனுமதிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாகை மாவட்டத்தில் நிகழ்ப் பருவ நெல் கொள்முதலுக்காக 169 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இதுவரை, 17 சத ஈரப்பதம் மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

தற்போது, விவசாயிகளின் கோரிக்கையையேற்று, 20 சதம் ஈரப்பதமுடைய நெல்லை, உரிய பணப் பிடித்தம் செய்து கொள்முதல் செய்யலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள நெல்லை, அருகில் உள்ள நேரடி நெல் நிலையத்துக்கு கொண்டுச் சென்று விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## கூட்டுறவு சங்கங்களில் 470 டன் பொட்டாஷ் இருப்பு

First Published : 31 Oct 2011 12:27:40 PM IST

தேனி, அக். 30: தேனி மாவட்டத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் தற்போது 470 டன் பொட்டாஷ் இருப்பில் உள்ளது.

மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், மானாவாரி மற்றும் இறவை பாசனப் பயிர்கள் வளர்ச்சிப் பருவத்தில் உள்ளன.

பயிர்களில் கூடுதல் மகசூல் மற்றும் எடை பெறுவதற்கு விவசாயிகள் பொட்டாஷ் உரத்தை அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த 6 மாதங்களில் பொட்டாஷ் விலை இரு மடங்கு உயர்ந்து, தற்போது ரூ. 600 வரை விற்பனையாகிறது. உரம் விலை உயர்வால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இது குறித்து, மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் நடப்பு மாதத்துக்கு 2,400 டன் யூரியா, 900 டன் டி.ஏ.பி., 1,000 டன் பொட்டாஷ், 2,090 டன் காம்ப்ளக்ஸ் உரம் தேவையுள்ளதாக கணக்கிட்டு, தேவையான அளவு உரம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக் கடைகளில் 1,200 டன் பொட்டாஷ், 620 டன் டி.ஏ.பி., 470 டன் பொட்டாஷ், 650 டன் காம்பளக்ஸ் உரம் ஆகியன கையிருப்பில் உள்ளன.

அரசு நிர்ணயித்துள்ளதை விட கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்பவர்கள் குறித்தும், உரம் விநியோகம் தொடர்பாக ஏற்படும் பிரச்னைகள் குறித்தும், மாவட்ட விவசாயத் துறை கட்டுப்பாட்டு அலுவலகம் தொலைபேசி எண்: 04546-251561-ல் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று, அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சாமி வாய்க்கால் அணை உடைந்து விவசாயம் பாதிப்பு**

First Published : 31 Oct 2011 12:25:56 PM IST

போடி, அக். 30: தொடர் மழையால் சாமி வாய்க்கால் அணை உடைந்து தண்ணீர் வீணாவதை அடுத்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

போடி வருவாய் கிராமம், அணைக்கரைப்பட்டி ஊராட்சிக்குள்பட்ட பகுதியில் சாமி வாய்க்கால் அணை அமைந்துள்ளது. கொட்டகுடி ஆற்றிலிருந்து பிரிந்துவரும் தண்ணீர் சாமி வாய்க்கால் மூலம் அம்மாகுளம் கண்மாய், கழிவோடை குளம் ஆகிய குளங்களை நிரப்பிவிட்டு, சின்னாற்றின் வழியாக மீண்டும் கொட்டகுடி ஆற்றில் இணைகிறது.

சாமி வாய்க்கால், கொட்டகுடி ஆற்றிலிருந்து பிரியும் இடத்தில், சாமி வாய்க்கால் அணை கட்டப்பட்டு தண்ணீர் பிரிந்து செல்கிறது. இந்த அணையை, போடி பொதுப்பணித் துறையினர் பராமரித்து வந்தனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பராமரிப்பின்றி, இப்பகுதியில் வாய்க்காலை தூர் வாராததால் மணல் மேடாகியுள்ளது. மேலும், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதில் அணையின் தடுப்புச் சுவர் சில மாதங்களுக்கு முன்னர் உடைந்துபோனது.

விவசாயிகளின் முயற்சியால் மணல் மூட்டைகள் வைத்து தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையினால், தண்ணீர் வரத்து அதிகரித்து இந்த மணல் மூட்டைகளும் அடித்துச் செல்லப்பட்டன.

சாமி வாய்க்கால் மூலம் இப்பகுதியில் நெல், கரும்பு, பாசிப் பருப்பு, உளுந்து, மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, மா, தென்னை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மேலும், 20-க்கும் மேற்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் தண்ணீர் வசதி பெறுகின்றன.

இது குறித்து, இப்பகுதி விவசாயிகள் சங்க நிர்வாகி சாமிக்கண்ணு கூறியது:

சாமி வாய்க்கால் அம்மாகுளம் கண்மாய் வரை செல்லும்போது, 200-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களும், அம்மாகுளம் உள்வாய் பரவு மூலம் 150 ஏக்கர் நிலங்களும், கண்மாய் நிரம்புவதன் மூலம் 500 ஏக்கர் நிலங்களும், கழிவோடை குளம் நிரம்புவதன் மூலம் 200 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

தற்போது, சாமி வாய்க்கால் அணை தடுப்புச் சுவர் உடைந்து தண்ணீர் அம்மாகுளம் கண்மாய், கழிவோடை குளம் ஆகியவற்றுக்குச் செல்லாமல் நேரடியாக கொட்டகுடி ஆற்றுக்குச் சென்றுவிடுகிறது. இதனால், விவசாயம் செய்யமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இது குறித்து, போடி பொதுப்பணித் துறை அலுவலகத்தில் பல முறை புகார் செய்தும் நடவடிக்கை இல்லை என்றார்.

எனவே, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து, சாமி வாய்க்கால் அணையில் உள்ள மணல் மேடுகளை அகற்றி, அணையின் தடுப்புச் சுவரை சீரமைத்து, தண்ணீர் வீணாவதைத் தடுக்க வேண்டும் என, இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**சாமி வாய்க்கால் அணை உடைந்து விவசாயம் பாதிப்பு**

First Published : 31 Oct 2011 12:25:56 PM IST

போடி, அக். 30: தொடர் மழையால் சாமி வாய்க்கால் அணை உடைந்து தண்ணீர் வீணாவதை அடுத்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

போடி வருவாய் கிராமம், அணைக்கரைப்பட்டி ஊராட்சிக்குள்பட்ட பகுதியில் சாமி வாய்க்கால் அணை அமைந்துள்ளது. கொட்டகுடி ஆற்றிலிருந்து பிரிந்துவரும் தண்ணீர் சாமி வாய்க்கால் மூலம் அம்மாகுளம் கண்மாய், கழிவோடை குளம் ஆகிய குளங்களை நிரப்பிவிட்டு, சின்னாற்றின் வழியாக மீண்டும் கொட்டகுடி ஆற்றில் இணைகிறது.

சாமி வாய்க்கால், கொட்டகுடி ஆற்றிலிருந்து பிரியும் இடத்தில், சாமி வாய்க்கால் அணை கட்டப்பட்டு தண்ணீர் பிரிந்து செல்கிறது. இந்த அணையை, போடி பொதுப்பணித் துறையினர் பராமரித்து வந்தனர். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக பராமரிப்பின்றி, இப்பகுதியில் வாய்க்காலை தூர் வாராததால் மணல் மேடாகியுள்ளது. மேலும், தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதில் அணையின் தடுப்புச் சுவர் சில மாதங்களுக்கு முன்னர் உடைந்துபோனது.

விவசாயிகளின் முயற்சியால் மணல் மூட்டைகள் வைத்து தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையினால், தண்ணீர் வரத்து அதிகரித்து இந்த மணல் மூட்டைகளும் அடித்துச் செல்லப்பட்டன.

சாமி வாய்க்கால் மூலம் இப்பகுதியில் நெல், கரும்பு, பாசிப் பருப்பு, உளுந்து, மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, மா, தென்னை போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மேலும், 20-க்கும் மேற்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் தண்ணீர் வசதி பெறுகின்றன.

இது குறித்து, இப்பகுதி விவசாயிகள் சங்க நிர்வாகி சாமிக்கண்ணு கூறியது:

சாமி வாய்க்கால் அம்மாகுளம் கண்மாய் வரை செல்லும்போது, 200-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களும், அம்மாகுளம் உள்வாய் பரவு மூலம் 150 ஏக்கர் நிலங்களும், கண்மாய் நிரம்புவதன் மூலம் 500 ஏக்கர் நிலங்களும், கழிவோடை குளம் நிரம்புவதன் மூலம் 200 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

தற்போது, சாமி வாய்க்கால் அணை தடுப்புச் சுவர் உடைந்து தண்ணீர் அம்மாகுளம் கண்மாய், கழிவோடை குளம் ஆகியவற்றுக்குச் செல்லாமல் நேரடியாக கொட்டகுடி ஆற்றுக்குச் சென்றுவிடுகிறது. இதனால், விவசாயம் செய்யமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இது குறித்து, போடி பொதுப்பணித் துறை அலுவலகத்தில் பல முறை புகார் செய்தும் நடவடிக்கை இல்லை என்றார்.

எனவே, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து, சாமி வாய்க்கால் அணையில் உள்ள மணல் மேடுகளை அகற்றி, அணையின் தடுப்புச் சுவரை சீரமைத்து, தண்ணீர் வீணாவதைத் தடுக்க வேண்டும் என, இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 6.8 மி. மீட்டர் மழை

First Published : 31 Oct 2011 01:43:30 PM IST

பெரம்பலூர், அக். 30: பெரம்பலூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை சராசரியாக 6.8 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பெரம்பலூரில் 4 மில்லி மீட்டர், வெண்பாவூரில் 6 மில்லி மீட்டர், தழுதாழையில் 14 மில்லி மீட்டர், பாடாலூர் மற்றும் செட்டிகுளம் பகுதிகளில் தலா 5 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் சராசரி மழையளவாக 6.8 மில்லி மீட்டர் பதிவாகியுள்ளது.

கால்நடை மருத்துவ முகாம்

அரியலூர், அக். 30: அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத்திலுள்ள நின்னியூர் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இந்த முகாம் தொடக்க விழாவுக்கு அரியலூர் மண்டலக் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தி. லட்சுமணன் தலைமை வகித்து, முகாமைத் தொடக்கி வைத்தார்.

செந்துறை கால்நடை உதவி மருத்துவர் பி. குமார், குழுமூர் இளநிலை கால்நடை உதவி மருத்துவர் த. புகழேந்தி, கால்நடைப் பராமரிப்பு உதவியாளர்கள் ஆ. லட்சுமணன், கல்யாணசுந்தரம் ஆகியோரைக் கொண்ட மருத்துவக் குழுவினர், முகாமில் பங்கேற்ற கால்நடைகளைப் பரிசோதனை செய்து சிகிச்சையளித்தனர்.

முகாமில் 430 மாடுகள், 686 வெள்ளாடுகள், 131 செம்மறி ஆடுகள் என 1247 கால்நடைகள் பங்கேற்றன. இதில் 128 செம்மறி ஆடுகள், 680 வெள்ளாடுகளுக்கு குடல்புழு நீக்கச் சிகிச்சையும், 25 பசுக்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

165 வெள்ளாடுகளுக்கு துள்ளுமாரித் தடுப்பூசியும், 125 செம்மறியாடுகள், 427 மாடுகள், 521 வெள்ளாடுகள் என மொத்தமாக 1073 கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசியும் போடப்பட்டன.

நீண்ட நாள்களாக சினைப் பிடிக்காமல் இருந்த 4 பசுகளுக்கு மலடுநீக்கச் சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாம் நிறைவில், சிறந்த 10 கன்றுகளுக்குப் பரிசு வழங்கப்பட்டது.

தினமலர்
உண்மையின் உரைகல்

பருவ மழை பெய்தும் நீர் சேமிப்பு கேள்விக்குறி : தர்மபுரி விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,01:40 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பருவ மழை பெய்த போதும், நீர் ஆதாரங்களில் நீர் சேமிப்பு கேள்விக்குறியாக இருந்து வருகிறது. விவசாயத்தை பிரதனமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை அடிப்படையாக கொண்டு, விவசாய பணிக்கு நீர் சேமிக்கப்படுகிறது. ஆண்டுதோறும், மாவட்டத்தில் சராசரி மழையளவை எட்டிய போதும், கடந்த சில ஆண்டுகளாக, நீர் ஆதாரங்களில் நீர் சேமிப்பு கேள்விக்குறியாக இருந்து வருகிறது.

ஆண்டுதோறும், தென்மேற்கு பருவமழை காலங்களில், மாவட்டத்தில் உள்ள, 190க்கும் மேற்பட்ட ஏரிகளில், 40 முதல் 50 சதவீதம் நீர் சேமிக்கப்படும். வடகிழக்கு பருவ மழைக்காலங்களில் அனைத்து நீர் ஆதாரங்களும், 100 சதவீதம் நிரம்பி விடும். இதனால், ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கும், மக்களின் குடிநீர் தேவைக்கும், விவசாய பணிகளுக்கு தேவையான நீர் இருக்கும். சமீப காலமாக நீர் ஆதாரங்கள் உள்ள பகுதியில் நீர் வழிக்கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும் நீர் சேமிப்பு கேள்விக்குறியாகியுள்ளது.
கடந்த காலங்களில், 100 சதவீதம் நிரம்பிய ஏரிகள் அனைத்தும் தற்போது, 80 சதவீதத்தை எட்டுவதே கடினமாக உள்ளது. தர்மபுரி நகரில் பெய்யும் மழை நீர் ராமக்காள் ஏரி, இலக்கியம்பட்டி பகுதியில் உள்ள மழை இலக்கியம்பட்டி ஏரி ஆகியவற்றில் சேமிக்கப்படும்.

தர்மபுரி நகரில் உள்ள சாக்கடை கால்வாய்கள் வழியாக பெருக்கெடுத்து செல்லும் நீர், ஏரிகளை சென்றடையும். தர்மபுரி நகரில் தற்போது, பல சாக்கடை கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், அடைக்கப்பட்டும், நீர் பெருக்கெடுத்து செல்ல முடியாத அளவுக்கு சாக்கடை கழிவுகள் சங்கமிக்கும் நிலை தொடர்ந்து வருவதால், மழை நீர் பெரும்பாலும் சாலைகளில் தேங்கி வருகிறது. இதே போல், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதார கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மழை நீர் விரயமாகும் நிலை நீடித்து வருகிறது. தற்போது, பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில், நீர் ஆதாரங்களில் நீர் சேமிப்பு கேள்விக்குறியாகி இருப்பதால், விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.

**வடகிழக்கு பருவமழை சமாளிக்க முன் ஏற்பாடு: டி.ஆர்.ஓ., தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,01:41 IST

தர்மபுரி: ""தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையை சமாளிக்க முன் ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது,'' என டி.ஆர்.ஓ., தெரிவித்தார். தர்மபுரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை முன் ஏற்பாடு பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் டி.ஆர்.ஓ., கணேஷ் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில், டி.ஆர்.ஓ., கணேஷ் பேசியதாவது: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் மழை வெள்ளம் தொடர்பான தகவல்கள் பாதிப்புகளை பொதுமக்கள் தெரிவிக்க வசதியாக, 1077 என்ற கட்டணம் இல்லாத டெலிஃபோன் எண் நிறுவப்பட்டுள்ளது. பொதுமக்கள் எந்த நேரமும் இந்த எண்ணை தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம்.

தீயணைப்பு துறை மூலம் தாலுகா அளவில் மழை வெள்ள காலங்களில் பொதுமக்கள் எவ்வாறு பாதுகாத்து கொள்ள வேண்டும், என செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டுள்ளது. வருவாய் துறையினர் மழை அளவு கணகீடு நிலையங்கள் சரியாக செயல்படுகிறதா? என கண்காணித்து உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

தீயணைப்பு துறையினர் வெள்ள காலங்களில் பொதுமக்களை காப்பாற்ற உயிர் காக்கும் கருவிகள் தயார் நிலையில் வைத்து கொள்ள வேண்டும். போலீஸார் கட்டுப்பாட்டு அறையை திறந்து முக்கிய செய்திகளை பரிமாறிக்கொள்ள வேண்டும். புயல் பாதுகாப்பு மையங்கள் பள்ளி கட்டிடங்கள், சமுதாய கூடங்கள் மற்றும் தனியார் திருமண மண்டபங்களை தயார் நிலையில் வைத்து புயல் வெள்ளத்தில் பாதிக்கப்படும் மக்களை தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பொதுப்பணித்துறையினர் நீர் தேக்க நிலையங்களில் ஏதாவது ஆக்கிரமிப்புகள் இருந்தால், அதை உடனடியாக அகற்ற வேண்டும். புல்டோசர், ஜே.சி.பி., போன்ற இயந்திரங்களை தயார் நிலையில் வைத்து சாலைகள் பாதிப்பு ஏற்படாத வகையில் பார்த்து கொள்ள வேண்டும். மழையை சமாளிக்க தேவையான அனைத்து முன் ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். கலெக்டரின் நேர்முக உதவியார் (பொது) ராஜு, மாவட்ட வழங்கல் அலுவலர் சுப்பிரமணி, வேளாண் இணை இயக்குனர் ராஜன், உதவி இயக்குனர் (பஞ்சாயத்து) மதுமதி, துணை இயக்குனர் (சுகாதாரம்) விஜயலட்சுமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கருர் மாவட்டத்தில் மல்லிகைப் பூக்கள் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,07:19 IST

கருர் : தமிழகமெங்கும் தற்போது பெய்து வரும் மழையால் பூக்கள் விலை அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக சந்தையில் பூ வியாபாரிகளிடம் விசாரித்தி போது , மல்லிகைப் பூ., வின் விலை கிலோ ரூபாய் 70 முதல் ரூபாய் 100 வரை விற்று கொண்டிருந்தது, தற்போது கிலோ ரூபாய் 300வரை விற்றுக் கொண்டிருக்கின்றது. தொடர் மழையாலும், கடும் பனி பொழிவாளும் பூ., வின் விலை அதிகரித்து வருகின்றது. இந்நிலை தொடர்ந்தால் மல்லிகை பூ., வின் விலை கிலோ 1000 வரை விற்க கூடம் என்று தெரிவித்தனர்.

**காய்கறி விற்க மகளிர் குழுவுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,02:02 IST

கரூர்: உழவர் சந்தையில் ஆங்கில காய்கறிகளை விற்பனை செய்ய மகளிர் உதவி குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கரூர் வேளாண்மை துணை இயக்குநர் ரவி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வேலாயுதம்பாளையம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த மகளிர் சுயஉதவி குழுவினர் ஆங்கில காய்கறிகளை உழவர் சந்தையில் விற்னை செய்து அதிக லாபம் பெற முடியும். இதனால் சுய உதவிகுழுவினர் அருகில் உள்ள உழவர் சந்தையில் உள்ள நிர்வாக அலுவலரை அணுகி தேவையான விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**கால்நடை மருத்துவப் பணி நேர்முக தேர்வுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,01:41 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நீர்வள நில வளத்திட்டத்தில் கால்நடை மருத்துவருக்கான நேர்முகத் தேர்வு வரும் 14ம் தேதி நடக்கிறது.
கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு அரசு நீர்வள மற்றும் நிலவளத் திட்டத்தின் கீழ் பெண்ணையாறு உபவடி நிலப்பகுதியில், தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறையில் கால்நடை மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளது. இங்கு பணிபுரிய விருப்பம் உள்ள தகுதிவாய்ந்த கால்நடை மருத்துவ பட்டதாரிகள் கலெக்டர் முன்னிலையில் நடக்கும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம். நேர்முகத்தேர்வில் கலந்து கொள்பவர்கள் பி.வி.எஸ்.சி., பட்டப்படிப்பு முடித்தவர்களாகவும், கால்நடை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும்.

இதற்கான நேர்முகத் தேர்வு வரும் 14ம் தேதி மாலை 4 மணிக்கு கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. நேர்முகத் தேர்வின் போது, உரிய ஆவணங்களை காண்பிக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் உபவடிநில கால்நடை மருத்துவருக்கு மாதாந்திர கட்டணமாக, 8,000 ரூபாய் வழங்கப்படும். மேலும், செயற்க்கை முறை கருவூட்டல் ஊக்கத்தொகை மற்றும் கன்று பிறப்பு ஊக்கத்தொகை அவரது செயல்பாட்டுக்கு ஏற்ப வழங்கப்படும். தகுதியானவர்கள் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

**வேளாண்துறையில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 01,2011,00:24 IST

அன்னூர் : அன்னூர் வட்டார விவசாயிகள் வேளாண் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறை மூலம் உணவு, தானிய உற்பத்தியை பெருக்க, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒருபகுதியாக சிறு, குறு விவசாயிகள் குறித்த அடிப்படை தகவல்களை சேகரித்து இணைய தளத்தில் பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது. அன்னூர் வட்டாரத்தில் 2005ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 9,692 சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இதை அடிப்படையாக கொண்டு இதுவரை 3,208 சிறு, குறு விவசாயிகள் கணக்கெடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் உதவி இயக்குனர் சீனிராஜ் கூறியதாவது: பதிவு செய்யாத விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ள வேண்டும். கணக்கெடுப்பின்போது நிலம் குறித்த தகவல், வங்கி கணக்கு எண், தொலைபேசி எண், பயிரிடப்படும் பயிர், போட்டோ ஆகியவற்றுடன் வர வேண்டும். விவசாயிகள் வசதிக்காக கிராம பஞ்சாயத்து அலுவலகம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் பதிவு செய்யும்பணி நடக்க உள்ளது. இது குறித்து மேலும் விபரங்களை 04254-264623 என்கிற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, சீனிராஜ் தெரிவித்துள்ளார்.

**கனமழையால் பூக்கள் தோட்டம் சேதம்: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,23:11 IST

சிறுபாக்கம் : மங்களூர் ஒன்றியத்தில் பெய்து வரும் கன மழையால் பூக்கள் தோட்டம் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சிறுபாக்கம் மற்றும் வேப்பூரைச் சுற்றியுள்ள அடரி, ரெட்டாக்குறிச்சி, மாங்குளம், நல்லூர், கண்டப்பங்குறிச்சி கிராமங்களைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் நீர்ப்பாசன நிலங்களில் ஒரு பகுதியில் பூக்கள் பயிர்களான மல்லிகை, சம்பங்கி, கனகாம்பரம், கோழிக்கொண்டை, ரோஸ் உள்ளிட்ட பூக்கள் பயிர்களை பயிரிடுவது வழக்கம். தினசரி அதிகாலையில் பறிக்கப்படும் பூக்களை தலைவாசல், ஆத்தூர், விருத்தாசலம் ஆகிய நகரப் பகுதிகளிலுள்ள பூ மார்க்கெட்டிற்கு அனுப்பி கணிசமான அளவில் வருவாய் ஈட்டி வந்தனர். தற்போது பூக்கள் பறித்து வரும் நிலையில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழையில் நனைந்து பூந்தோட்டங்கள் அழிந்து வருகின்றன. அதிக செலவிட்டு பூக்களை பயிரிட்ட விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,22:06 IST

தேனி : உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும், என கலெக்டர் பழனிசாமி எச்சரித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ளதால், மானாவாரி, இறவை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி பருவத்தில் உள்ளன. யூரியா 2,400 டன், டி.ஏ.பி., 900 டன், பொட்டாஷ் 1000 டன் காம்ப்ளக்ஸ் 2,090 டன் என கணக்கிடப்பட்டு தேவைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. யூரியா 1,200 டன், டி.ஏ.பி., 620 டன், பொட்டாஷ் 470 டன், காம்ப்ளக்ஸ் 650 டன் இருப்பில் உள்ளது. விவசாயிகள் உரங்களை வாங்கும்போது உரமூடையில் உள்ள விலைக்கே வாங்க வேண்டும்.
கூடுதல் விலைக்கு விற்றால் 04546-251 561 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

**பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் நவ.30**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 31,2011,22:00 IST

சிவகங்கை : ""தேசிய விவசாய காப்பீடு திட்டத்தில், நவ.30க்குள் காப்பீடு செய்யலாம்," என, விவசாயத்துறை இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் நடப்பு ஆண்டிற்கான நெல் சம்பா பருவத்தில் திருந்திய தேசிய விவசாய காப்பீடு திட்டம் செயல்படுகிறது. இதில் அனைத்து விவசாயிகளும் காப்பீடு செய்யலாம். கிராமங்கள் வரை இத்திட்டம் செயல்படும். பிரிமிய தொகையில் 60 சதவீதம் மானியம் உண்டு. எக்டேருக்கு 603 ரூபாய் கட்டவேண்டும். இதற்கான காப்பீட்டு தொகை எக்டேருக்கு 11, 770 ரூபாய். கூடுதலாக எக்டேருக்கு 13,640 செலுத்தி காப்பீடு செய்யலாம். இதற்கு அரசு மானியம் கிடையாது. கூடுதல் பிரீமியமாக எக்டேருக்கு 1,723 ரூபாய் கட்டவேண்டும். கடன் பெறாத விவசாயிகள் நவ.,15க்குள் காப்பீடு செய்யலாம். கடன் பெறும் விவசாயிகள்நவ.,30க்குள் காப்பீடு செய்யவேண்டும். விவசாயிகள் 10(1), அடங்கலுடன் காப்பீடு படிவத்தை பூர்த்தி செய்து தொடக்க கூட்டுறவு கடன் சங்கம், தேசிய வங்கிகளில் பிரீமிய தொகை செலுத்தலாம், என்றார்.

## இலங்கை–தமிழகம் இடையே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை தமிழ்நாட்டில் தொடர்ந்து 3 நாட்களுக்கு மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்

*சென்னை, நவ.1–*
*இலங்கை–தமிழகம் இடையே புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.*
*புதிய காற்றழுத்த தாழ்வு நிலை*
*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. தொடக்கத்திலேயே பரவலாக மழையை தந்துள்ளது. அதனால் வறட்சியான மாவட்டங்களில் வானம் பார்த்த பூமியை நம்பிய பெரும்பாலான விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*
*வடகிழக்கு பருவமழை தொடங்கிய பின்பு 2 குறைந்தழுத்த தாழ்வு நிலை உருவாகி மறைந்துள்ளன. நேற்று காலை புதிதாக குறைந்தழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது.*
*இதுகுறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:–*
*இதுவரையில் குமரி முதல் தென் தமிழகம் வரை பரவி இருந்த குறைந்தழுத்த தாழ்வு நிலை மறைந்தது. இந்த நிலையில் காலையில் (நேற்று ) ஒரு புதிய காற்றழுத்த தாழ்வுநிலை உருவாகி உள்ளது. அது இலங்கை முதல் வட தமிழகம் வரை வங்கக்கடலில் பரவி உள்ளது.*
*3 நாட்களுக்கு மழை*
*இதன் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், உள் மாவட்டங்களில் அநேக இடங்களிலும் இன்று மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும்.*
*சென்னையில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*
*இந்த குறைந்தழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழ்நாட்டில் தொடர்ந்து 3 நாட்களுக்கு மழை பெய்யும்.*
*இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.*
*நேற்று காலை 8.30 மணி வரை பெய்த 24 மணி நேர மழை அளவு வருமாறு:–*
*குலசேகரப்பட்டினத்தில் 12 செ.மீ. மழை*
*அதிகபட்ச மழையாக தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் 12 செ.மீ. மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டம் பேராவூரணி, ஸ்ரீவைகுண்டம் தலா 9 செ.மீ., மணிமுத்தாறு, சாத்தான்குளம், திருச்செந்தூர் தலா 8 செ.மீ., அரிமளம், திருத்துறைப்பூண்டி தலா 7 செ.மீ., அதிராம்பட்டினம், மணமேல்குடி, கன்னியாகுமரி தலா 6 செ.மீ., வல்லம், முத்துப்பேட்டை, மயிலாடுதுறை, திருமயம், தொண்டி,*

அம்பாசமுத்திரம், சிவகிரி, பாளையங்கோட்டை, மணியாச்சி, உத்தமபாளையம், திருபுவனம் தலா 5 செ.மீ.,

விருத்தாசலம், காரைக்கால், நன்னிலம், கொள்ளிடம், நாங்குநேரி, தூத்துக்குடி, விளாத்திக்குளம், கழுகுமலை, மயிலாடுதுறை, சாத்தூர், விருதுநகர் தலா 4 செ.மீ.,

சென்னை

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகம், கேளம்பாக்கம், பொன்னேரி, காட்டுமன்னார்கோவில், பரங்கிப்பேட்டை, திருவிடைமருதூர், மன்னார்குடி, திருவாரூர், சீர்காழி, தரங்கம்பாடி, கரம்பக்குடி, விராலிமலை, புதுக்கோட்டை, திருவாடானை, செங்கோட்டை, சங்கரன்கோவில், கோவில்பட்டி, கொளச்சல், போளூர், கோவை, குன்னூர், மருங்காபுரி, ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர், சிவகங்கை, திருப்பத்தூர், அருப்புக்கோட்டை, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் தலா 3 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் பல இடங்களிலும் மழை பதிவாகி உள்ளது.

போக்குவரத்து பாதிப்பு

சென்னையில் நேற்று காலை மழை பெய்தது. பின்னர் விட்டு, விட்டு சில இடங்களில் தூறியது. வானம் மேக மூட்டமாகவே காணப்பட்டது. மழையின் காரணமாக வடசென்னையிலும், கோயம்பேடு 100 அடி ரோட்டிலும், அடையாறிலும் காலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.